©
GOVERNMENT OF TAMIL NADU
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 168] CHENNAI, FRIDAY, APRIL 11, 2025
Panguni 28, Kurothi, Thiruvalluvar Aandu–2056

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a Section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### LAW DEPARTMENT

**No. II(2)/LAW/304(a)/2025.**

ACT – STATE – THE TAMIL NADU UNIVERSITIES LAWS (SECOND AMENDMENT) BILL, 2022 (L.A.BILL No. 48 OF 2022) – PUBLICATION ORDERED AS TAMIL NADU ACT 10 OF 2024 – DEEMED TO HAVE ASSENTED TO BY THE GOVERNOR ON 18.11.2023 – NOTIFICATION ISSUED.

*[G.O.Ms.No. 86, Law (DFG.), 11th April 2025, பங்குனி 28, குரோதி, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

READ:

1. G.O.(Ms).No.315, Law, dated 07.03.2024.
2. Orders of the Hon'ble Supreme Court in W.P.(C) No.1239/2023 dated 08.04.2025.

**ORDER:**

The following Notification shall be published in English and in Tamil languages in the *Tamil Nadu Government Gazette* Extraordinary dated 11.04.2025.

NOTIFICATION.

WHEREAS the Tamil Nadu Universities Laws (Second Amendment) Bill, 2022 (L.A.Bill No.48 of 2022) was passed by the Tamil Nadu Legislative Assembly on the 19th October 2022 and presented to the Hon'ble Governor for his assent;

AND WHEREAS the Hon'ble Governor has withheld the assent to the said Bill on the 13th Novermber 2023;

AND WHEREAS based on the resolution moved by the Hon'ble Chief Minister, which was passed unanimously in the Tamil Nadu Legislative Assembly on the 18th November 2023, the said Bill was reconsidered and passed again by the Legislative Assembly without any change;

AND WHEREAS the said L.A.Bill No.48 of 2022 was presented again to the Hon'ble Governor on the 18th November 2023 and he reserved the Bill for consideration of the Hon'ble President on the 28th November 2023;

AND WHEREAS the Hon'ble President assented to the said Bill on the 18th February 2024 and the same was published as Tamil Nadu Act 10 of 2024 in Part IV- Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary dated on the 7th March 2024 and the said Act came into force on the above said date, namely on 07.03.2024;

AND WHEREAS, the Hon'ble Supreme Court in its Order dated 08.04.2025 in W.P.(C) No.1239/2023 has ordered that all the action of the Hon'ble President after date of reserving the above said Bill is *non-est* in law and shall be deemed to have been assented to by the Hon'ble Governor on the date on which the said Bill was presented to him for assent.

NOW, THEREFORE, by virtue of the above said orders of the Hon'ble Supreme Court of India dated 08.04.2025, the said L.A. Bill No.48 of 2022 is deemed to have been assented by the Hon'ble Governor on the 18th November 2023.

S. GEORGE ALEXANDER,
*Secretary to Government.*

**சட்டத்துறை**

**சட்டம் – மாநிலம் – 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண்.48/2022) – தமிழ்நாடு சட்டம் 10/2024 என வெளியிட ஆணையிடப்பட்டது – 18.11.2023 அன்று மாண்புமிகு ஆளுநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கருதப்படுகிறது – அறிவிக்கை வெளியிடப்படுகிறது.**

*[அரசு ஆணை (நிலை) எண் 86, சட்ட (வரைவு)த் துறை, 11 ஏப்ரல் 2025, பங்குனி 28, குரோதி, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.315, சட்டத்துறை, தேதி 07.03.2024.
2. 08.04.2025 தேதியிட்ட நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1239/2023–ல் மாண்பமை உச்சநீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள்.

**ஆணை:–**

பின்வரும் அறிவிக்கை 11.04.2025 தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**அறிவிக்கை**

2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.48/2022) 19 அக்டோபர் 2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு ஆளுநரின் ஒப்புதலுக்காக அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது என்பதாலும்;

மற்றும் கூறப்பட்ட சட்டமுன்வடிவிற்கு 13 நவம்பர் 2023 அன்று மாண்புமிகு ஆளுநர் இசைவளிக்க மறுத்தார் என்பதாலும்;

மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.11.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்மொழியப்பட்ட தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் கூறப்பட்ட சட்டமுன்வடிவு மறுபரிசீலனை செய்யப்பட்டு எந்தவித மாறுதலுமின்றி சட்டமன்றப் பேரவையில் மீண்டும் இயற்றப்பட்டது என்பதாலும்;

மற்றும் கூறப்பட்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.48/2022 18.11.2023 அன்று மாண்புமிகு ஆளுநரிடம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டு, அவர் அந்தச் சட்டமுன்வடிவை 28.11.2023 அன்று மாண்புமிகு குடியரசுத்தலைவரின் பரிசீலனைக்ககாக அனுப்பியிருந்தார் என்பதாலும்;

மற்றும், மாண்புமிகு குடியரசுத்தலைவர் அவர்கள், கூறப்பட்ட சட்டமுன்வடிவிற்கு 18.02.2024 அன்று ஒப்புதல் வழங்கி, அது 07.03.2024 தேதியிட்ட **தமிழ்நாடு அரசு சிறப்பிதழின்** பகுதி IV –பிரிவு 2இல் தமிழ்நாடு சட்டம் 10/2024 என சட்டமாக வெளியிடப்பட்டு மேற்கூறிய தேதியன்று, அதாவது, 07.03.2024 அன்று நடைமுறைக்கு வந்து விட்டது என்பதாலும்;

மற்றும் மாண்பமை உச்சநீதிமன்றம் நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1239/2023 08.04.2025 தேதியிட்ட அதன் ஆணையில், மேற்கூறிய சட்டமுன்வடிவை மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு பரிசீலனைக்கு அனுப்பிய பின்னர் மாண்புமிகு குடியரசுத் தலைவர் எடுத்திருக்கக்கூடிய அனைத்து விளைவுறு நடவடிக்கைகளும் சட்டத்தின்படி இல்லா நிலையது என்றும் மேற்கூறிய சட்ட முன்வடிவு மறுபரிசீலனை செய்யப்பட்டு ஒப்புதலுக்காக மாண்புமிகு ஆளுநருக்கு மீண்டும் அனுப்பப்பட்ட நாளில் அவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது என்பதாலும்;

எனவே, தற்போது 08.04.2025 தேதியிட்ட மாண்பமை உச்சநீதிமன்றத்தின் மேற்கூறிய ஆணையின் அடிப்படையில் கூறப்பட்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.48/2022 ஆனது மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநரால் 18 நவம்பர் 2023 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU